**திருத்தணியில் பலத்த மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 14 Jun 2010 01:35:36 PM IST

திருத்தணி, ஜூன் 13: திருத்தணியில் ஞாயிற்றுக்கிழமை பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

÷திருத்தணி அதன் சுற்றுப்புற கிராமங்களில், ஆயிரக்கணக்கான விவசாய நிலங்களில் நெல், மணிலா பயிரிடப்பட்டு வருகின்றன. தற்போது சம்பா சாகுபடிக்காக விவசாயிகள் நிலங்களை உழுது, நடவுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மின் தட்டுப்பாட்டால், தேவையான மின்சாரம் இன்றி மின் மோட்டார்களை இயக்க முடியாமல் விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

÷இந்நிலையில் திருத்தணியில் பலத்த மழை பெய்தது. திருத்தணி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் சூறாவளி காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால் ஏரிகளிலும், குளங்களிலும் மழைநீர் நிரம்பி வருகின்றன. தண்ணீரின்றி நடவு பணிகளை எப்படி மேற்கொள்வது என்ற சிந்தனையில் இருந்த விவசாயிகள், சில தினங்களாக அவ்வப்போது பெய்யும் இந்த திடீர் மழையை கண்டு மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

÷இது குறித்து விவசாயி எஸ்.கே.சுப்பிரமணியம் கூறுகையில்: திருத்தணி மற்றும் சுற்றப்புற பகுதிகளில் அவ்வப்போது பெய்து வரும் இந்த திடீர் மழை எங்களுக்கு கிடைத்த மிகப் பெரிய வரப்பிரசாதமாகும் என்று கூறினார்.

**நதிநீர் இணைப்புத் திட்ட வெள்ளநீர் கால்வாய்: கலக்கத்தில் விவசாயிகள்**

First Published : 14 Jun 2010 11:34:09 AM IST

அம்பாசமுத்திரம், ஜூன் 13: நதிநீர் இணைப்புத் திட்டத்தின்கீழ் வறட்சியான பகுதிகளுக்கு தண்ணீர் வழங்கும் வகையில் வெள்ளநீர் கால்வாய் வெட்டப்பட்டு வருகிறது. இத் திட்டத்துக்காக கன்னடியன் கால்வாய் அகலப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கடைமடைக்கும் தண்ணீர் கிடைக்குமா என்ற அச்சம் விவசாயிகளிடையே எழுந்துள்ளது.

மழைக் காலங்களில் தாமிரபரணி ஆற்றில் வீணாக 13,800 மில்லியன் கனஅடி நீர் கடலில் கலக்கிறது. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி ஆற்றின் மூலம் 2.55 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெற்று வந்த போதிலும் திசையன்விளை, ராதாபுரம், சாத்தான்குளம் உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட கிராமங்களில் வறட்சி நிலவுகிறது. எனவே, வறட்சியான

பகுதிகளுக்கு தண்ணீர் வழங்கும் வகையில் ரூ. 369 கோடியில் நதிநீர் இணைப்புத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது.

இத் திட்டத்துக்காக தாமிரபரணி நதி, கோரையாறு, எலுமிச்சையாறு, கருமேனி ஆறு, பச்சையாறு, நம்பியாறு ஆகிய 6 நதிகளை இணைத்து தமிழகத்தில் முன்னோடித் திட்டமாக நதிநீர் இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத் திட்டத்துக்காக கன்னடியன் கால்வாயில் கல்லிடைக்குறிச்சி அருகேயுள்ள வெள்ளங்குழியில் இருந்து சாத்தான்குளம் வரை 73 கி.மீ. தொலைவுக்கு வெள்ளநீர் கால்வாய் வெட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் கன்னடியன் அணைக்கட்டில் இருந்து வெள்ளங்குழி வரை 6.5 கி.மீ. தொலைவுக்கு கன்னடியன் கால்வாய் அகலப்படுத்தப்படுகிறது. 480 கனஅடி நீரைக் கடத்தும் திறன்கொண்ட கன்னடியன் கால்வாயை 3,650 கனஅடி நீரைக் கடத்தும் வகையில் அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

கார் பருவ சாகுபடிக்கு இக் கால்வாய் மூலம் பாசனம் பெறும் 12,500 ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் திறக்க வேண்டிய நிலையில் கால்வாயில் நடைபெற்று வரும் பணியை நிறுத்திவிட்டு, இம் மாதம் 15-ம் தேதி (செவ்வாய்க்கிழமை) பாசனத்துக்குத் தண்ணீர் திறக்கப்படும் என பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். தற்போது கால்வாயில் தண்ணீர் திறக்கும் வகையில் சீர்படுத்தப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் முதல் முறையாக கன்னடியன் கால்வாயில் சிமெண்ட் தளம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருப்பினும் இத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படாததால் கால்வாயின் கடைமடைக்கும் தண்ணீர் எட்டாத நிலை இருந்து வருகிறது.

இந்நிலையில், இக் கால்வாய் வெள்ளநீர் கால்வாய்த் திட்டத்துக்காக அகலப்படுத்தப்பட்டுள்ளதால் கடைமடைக்கும் தண்ணீர் கிடைக்குமா என்ற அச்சம் விவசாயிகளிடையே எழுந்துள்ளது. பாசனம் பாதிக்காத வகையில் தண்ணீர் வழங்கப்படும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

First Published : 14 Jun 2010 11:34:32 AM IST

ராமநாதபுரம், ஜூன் 13: ராமநாதபுரம் மாவட்ட ஊராட்சி மன்றக் கூட்ட அரங்கில், மாவட்ட ஆட்சியர் த.ந. ஹரிஹரன் தலைமையில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 18-ம் தேதி நடைபெறவுள்ளது. இது தொடர்பாக, வெள்ளிக்கிழமை ஆட்சியர் அலுவலகம் மூலமாக வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு: அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள

இக்கூட்டத்தில், விவசாயிகளும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு விவசாயம் சார்ந்த பொருள்களைப் பற்றி விவாதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகள் பிரச்னைகளுக்கு கண்காணிப்பு அறை தொடக்கம்**

First Published : 14 Jun 2010 01:31:17 PM IST

காஞ்சிபுரம், ஜூன் 13:  காஞ்சிபுரத்தில் விவசாயிகளின் பிரச்னைகளை தெரிந்து கொள்ள கண்காணிப்பு அறை தொடங்கப்பட்டுள்ளது.

÷இது குறித்து வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) ஜெ.சேகர் வெளியிட்ட அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்டத்தில் சொர்ணாவரி பருவத்துக்கு தேவையான உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகள் தேவையான அளவுக்கு தனியார் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

÷மேலும் தொழில்நுட்பங்கள் தொடர்பாகவோ, உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் விநியோகத்தில் குறைகள் இருந்தாலோ அது தொடர்பான புகார்களை தெரிவிக்க வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் கண்காணிப்பு அறை தொடக்கப்பட்டுள்ளது. ÷காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை தினமும் வேலை நாள்களில் செயல்படும். எனவே காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் தொழில்நுட்பம் தொடர்பான விளக்கங்களை பெறலாம். எனவே காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் தொழில்நுட்பம் தொடர்பான புகார்கள் ஏதேனும் இருந்தால் கண்காணிப்பு அறை தொலைபேசி எண் 044-27222977 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

÷மேலும் இதுபோன்ற புகார்களை அந்தந்த வட்டாரங்களில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர்களை தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

÷வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலர்கள்: சிறுகாவேரிப்பாக்கம்-044-27296845, வாலாஜாபாத்-27256760, உத்தரமேரூர்-27272501, காட்டாங்கொளத்தூர்-27426861, திருக்கழுகுன்றம்-274481881, திருப்போரூர்-27445233, மதுராந்தகம்-27552304, அச்சிறுப்பாக்கம்-27523411, சித்தாமூர்-27544485, பவுஞ்சூர்-27539639, ஸ்ரீபெரும்புதூர்-27162233, படப்பை-27174401, சிட்லப்பாக்கம்-22236325 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம்.

**வேளாண் பல்கலை. முன்னாள் துணைவேந்தர் மறைவு**

First Published : 15 Jun 2010 09:33:48 AM IST

கோவை, ஜூன் 14: கோவை வேளாண் பல்கலை. முன்னாள் துணைவேந்தர் எஸ்.சங்கரன் (75) அண்மையில் மறைந்தார். அவரது இரங்கல் கூட்டம் பல்கலைக்கழக வளாகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

÷கடந்த 1993-ம் ஆண்டு முதல் 1996-ம் ஆண்டு வரை வேளாண் பல்கலைக்கழகத்தின் 5-வது துணைவேந்தராக இவர் பதவி வகித்தார். இவரது பதவிக் காலத்தில் பல்கலைக்கழகத்தில் உழவியல், வேளாண்மை நுண்ணுயிரியல், பயிர்ப் பெருக்கம், மரபியல் மற்றும் வேளாண் பூச்சியியல் ஆகிய துறைகளின் முன்னோடி மையங்களை துவக்கி வைத்தார்.

÷இதைத் தவிர, களை கொல்லி ஆய்வுக் கூட்டத்தை தனது முயற்சியால் நிறுவினார். மாணவர் நல இயக்ககத்தை அவர் உருவாக்கினார். இந்த இயக்ககம் மாணவர்களுக்கான வேலைவாய்ப்புக்கு வழிகாட்டுவதோடு மாணவர்களுக்கு நல்ல எதிர்காலம் அமையவும் தேவையான உதவிகளை செய்து வருகிறது.

÷பேராசிரியர் சங்கரனுக்கு பாலமணி என்ற மனைவியும் ஒரு மகனும், மகளும் உள்ளனர். பல்கலை. வளாகத்தில் நடந்த இரங்கல் கூட்டத்தில் அவருக்கு மாணவர்களும், ஆசிரியர்களும் அஞ்சலி செலுத்தினர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 80.32 அடி**

First Published : 14 Jun 2010 10:34:59 AM IST

சேலம், ஜூன் 13: மேட்டூர் அணை நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 80.32 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 3,001 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,045 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணை நீர் இருப்பு 42.27 டி.எம்.சி.

**நீலகிரியில் வலுக்கிறது பருவமழை**

First Published : 14 Jun 2010 10:33:18 AM IST

Last Updated : 14 Jun 2010 10:38:08 AM IST

உதகை, ஜூன் 13: நீலகிரி மாவட்டத்தில் கடந்த 4 நாட்களாக பருவமழை வலுத்து வருகிறது. கடந்த 3 நாட்களை விட ஞாயிற்றுக்கிழமை பலத்த மழை பெய்துள்ளது.

மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை வரை அதிகளவாக அவலாஞ்சி பகுதியில் 171 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 615 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. அதிகளவாக அவலாஞ்சி பகுதியில் 171 மி.மீரும், தேவாலா பகுதியில் 80 மி.மீரும், அப்பர் பவானி பகுதியில் 7 மி.மீரும் மழை பதிவாகியுள்ளது.

பிற பகுதிகளில் பெய்த மழை அளவு விவரம்: (அளவு மி.மீரில்) தேவாலா-80, அப்பர்பவானி-70, எமரால்டு-53, கெத்தை-22, கேத்தி-45, நடுவட்டம்-43, குந்தா பாலம் மற்றும் கோத்தகிரி தலா- 80, கிளன்மார்கன் -123, பர்லியார்-12, கெத்தை-9, கிண்ணக்கொரை-5, உதகை-4.7, கொடநாடு-3.8.

தினமலர்

**காஞ்சியில் விவசாயிகள் புகார் தெரிவிக்ககண்காணிப்பு அறை துவக்கம்**

காஞ்சிபுரம் ; காஞ்சிபுரம் மவட்டத்தில் விவசாயிகளின் பிரச்னைகளை தெரிந்து கொள்வதற்காக வேளாண்மைத் துறை சார்பில் கண்காணிப்பு அறை துவக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடப்பு சொர்ணவாரி பட்டத்தில் 8,286 எக்டரில் நெல், 189 எக்டரில் சிறுதானியம், 486 எக்டரில் பயறு வகைகள், 1,018 எக்டரில் எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.அவற்றுக்கு தேவையான உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் தேவையான அளவிற்கு தனியார் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்பங்கள் குறித்து அறிந்து கொள்ளவோ, உரங்கள் மற்றும் பூச்சி மருந்து வினியோகத்தில் குறைபாடுகள் இருந்தாலோ விவசாயிகள் தகவல் தெரிவிப்பதற்கு வசதியாக காஞ்சிபுரத்தில் உள்ள வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் கண்காணிப்பு அறை துவக்கப்பட்டுள்ளது.
இவ்வறை காலை 10 மணியிலிருந்து மாலை 6 மணி வரை தினமும் வேலை நாட்களில் செயல்படும். டெலிபோன் எண் 044-27222977. இது தவிர சிறுகாவேரிபாக்கம், வாலாஜாபாத், உத்திரமேரூர், காட்டாங்கொளத்தூர், திருக்கழுக்குன்றம், திருப்போரூர், மதுராந்தகம், அச்சரப்பாக்கம், சித்தாமூர், பவுஞ்சூர், ஸ்ரீபெரும்புதூர், படப்பை, சிட்லப்பாக்கம் ஆகிய இடங்களில் உள்ள வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தையும் விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம் என, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் (பொறுப்பு) சேகர் தெரிவித்தார்.

**ஸ்டீல் நிறுவனத்தால் விவசாயம் பாதிப்பு:நிவாரணம் பெற்றுத்தர கலெக்டருக்கு மனு**

சேலம்: "மேச்சேரி ஒன்றியம் பொட்டனேரி ஜே.எஸ்.டபிள்யு., ஸ்டீல் நிறுவனத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கு இழப்பீடு பெற்றுத்தர வேண்டும்' என, கலெக்டரிடம் புகார் மனு அளிக்கப்பட்டது. சேலம் புறநகர் மேற்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்க மாவட்ட செயலாளர் சித்துராஜு தலைமையிலான தொழிலாளர்கள் கலெக்டரிடம் கொடுத்த மனுவில் கூறியிருப்பதாவது: மேச்சேரி

ஒன்றியம் பொட்டனேரி ஜே.எஸ்.டபிள்யு., ஸ்டீல் நிறுவனத்துக்காக நிலம் வழங்கியவர்களின் வாரிசுகளுக்கு உடனடியாக தகுதிக்கேற்ற வேலை வழங்க வேண்டும். தொழிற்சாலையில் முன் அறிவிப்பின்றி பணி நீக்கம் செய்யப்பட்டவர்களை மீண்டும் பணி அமர்த்த வேண்டும்.

தொழிலாளர்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும். ஒப்பந்த தொழிலாளர்களுக்கு 95 சதவிகிதம் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும். வெளிமாநிலங்களில் இருந்து வந்து பணிபுரியும் ஒப்பந்த தாரர்களை வெளியேற்ற வேண்டும். ஜே.எஸ்.டபிள்யு., தொழிற்சாலையில் இருந்து நச்சு கழிவுகள் வெளியேறுவதால், 5 கி.மீ., சுற்றளவிற்கு விவசாயம் முற்றிலும் அழிந்து, விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிவிட்டது. எனவே விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு, ஆண்டுக்கு ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும்.இவ்வாறு அம்மனுவில் கூறப்பட்டிருந்தது

**நீலகிரியில் மழையால் பவானிசாகர் நீர் மட்டம் உயர்வு**

ஈரோடு: பவானிசாகர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்வதால், அணைக்கு நீர் வரத்து அதிகரித்து, ஒரே நாளில் நீர்மட்டம் ஒன்றரை அடி உயர்ந்து வருகிறது. பவானிசாகர் அணை மூலம் ஈரோடு மாவட்டத்தில் 2.7 லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 120 அடி, 15 அடி சகதியாக உள்ளதால், 105அடி மட்டும் தண்ணீர் தேக்கப்படுகிறது. 32.8 டி.எம்.சி., கொள்ளவு கொண்டது. அணையிலிருந்து, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, கீழ்பவானி, காலிங்கராயன் கால்வாய்கள் மூலம் பாசனம் நடக்கிறது. சென்றாண்டு ஜூன் மாதம் போதிய பருவமழை பெய்யாமல், அணை நீர்மட்டம் 45 அடியாக இருந்ததால், குறித்த காலத்தில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க இயலவில்லை. கேரளாவில் மழை துவங்கியதை அடுத்து அணைக்கு தண்ணீர் வரத்து துவங்கியது.

அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளாக நீலகிரி மாவட்டம், மேல்பவானி, மாயாறு, கூடலூர் பகுதிகளில் ஜூலை மாதம் 16ம் தேதி கன மழை பெய்ததால், அன்று மாலை 3 மணிக்கு 1.70 லட்சம் கனஅடி தண்ணீர் அணைக்கு வந்தது. அணையின் நீர்மட்டம் 65 அடியாக உயர்ந்தது. இதையடுத்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. மீண்டும் நவம்பர் மாதம் நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து ஒரு வாரம் பெய்த கனமழையால், 10ம் தேதி அணையின் வரலாற்று சாதனையாக 2,56,343 கனஅடி தண்ணீர் வந்தது. ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 97 அடியாக உயர்ந்தது. இதன் பின்னர் ஏழு மாதமாக குறிப்பிடும் படியாக அணைக்கு நீர் வரத்து இல்லை. அணையிலிருந்து பாசனத்துக்கு வாய்க்காலில் தினமும் 2,300 கன அடி வரை திறக்கப்பட்டதால், அணையின் நீர்மட்டம் வெகுவாக சரிந்தன. சென்றமாதம் அணையின் நீர்மட்டம் 65 அடியாக சரிந்தது. நீர்ப்பிடிப்பு பகுதியில் மழையின்றி கடும் வெயில் அடித்ததால் அணைக்கு நீர் வரத்து இல்லை. நடப்பாண்டு கேரளாவில் முன்னதாகவே பருவமழை

துவங்கியுள்ளதால், அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான, நீலகிரி, மேல்பவானி, மாயாறு, கூடலூர் பகுதியில் இரண்டு நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. 11ம் தேதி அணையின் நீர்மட்டம் 66.50 அடியாகவும், நீர் வரத்து 345 கனஅடியாகவும் இருந்தது.

நேற்று முன்தினம் நீர்மட்டம் 66.35 அடியாகவும், 1,000 கன அடி நீர் வரத்தும் இருந்தது. தொடர் மழையால், நேற்று மாலை 4 மணி நிலவரப்படி, அணைக்கு 6,838 கனஅடி தண்ணீர் வந்தது. அணையின் நீர்மட்டம் 68.05 அடியாக உயர்ந்தது. ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் ஒன்றரை அடி வரை உயர்ந்தது. தொடர்ந்து நீர் வரத்துள்ளதால், அணையில் நீர்மட்டம் மேலும் உயர வாய்ப்புள்ளது. அணையிலிருந்து ஆற்றில் 1,000 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதே நிலை தொடர்ந்தால், இன்று அணையின் நீர்மட்டம் 70 அடியை தாண்டும் என அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

**வேளாண் விரிவாக்க மையத்தில் குறைகேள் பதிவேடு அறிமுகம்**

மோகனூர்: "வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகள் குறைகேள் பதிவேடு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது' என, மோகனூர் வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: மோகனூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசின் திட்டங்கள், புதிய தொழில் நுட்பங்கள் செயலாக்கம் செய்யப்படுகிறது. நவீன வேளாண் மற்றும் மானியத்திட்டங்களில் ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் நிவர்த்திச் செய்து கொள்ள மோகனூர் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகள் குறைகேள் பதிவேடு துவங்கப்பட்டுள்ளது. மோகனூர் வட்டார வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி அங்கு பராமரிக்கப்படும் சிறப்பு பதிவேட்டில், விவசாயிகள் சந்தேகங்களை பதிவு செய்து கொள்ளலாம். வேளாண் துறை அலுவலர்கள் சம்பந்தப்பட்ட விவசாயிகளை நேரில் அல்லது ஃபோனில் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்வர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**சோலையாறு நீர்மட்டம் ஒரே நாளில் 11 அடி உயர்வு**

வால்பாறை : தொடர் மழையால் சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று ஒரே நாளில் பதினொரு அடி உயர்ந்துள்ளது.

வால்பாறையில் பெய்துவரும் கன மழையினால் பி.ஏ.பி.,பசானத்திட்டத்தின் முக்கிய அணைகளான சோலையாறு, மேல்நீராறு, கீழ்நீராறு, அப்பர் ஆழியாறு, காடம்பாறை ஆகிய அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது.வால்பாறை டவுன் பகுதி மக்களின் குடிநீர்

ஆதாரமாக விளங்கும் அக்காமலை செக் டேம் நேற்றுமுன்தினம் நிரம்பியது. 160 அடி கொள்ளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்றுமுன்தினம் 39.40 அடியாக இருந்தது. இடைவிடாது பெய்துவரும் மழையின் காரணமாக நேற்று காலை 50.30 அடியாக உயர்ந்தது. ஒரே நாளில் 11 அடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது.அணைக்கு விநாடிக்கு இரண்டு ஆயிரத்து 863 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. சோலையாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதையடுத்து நேற்று முதல் மானாம்பள்ளி பவர் ஹவுஸ் மீண்டும் இயக்கப்பட்டது.

இதனையடுத்து பரம்பிக்குளம் அணைக்கு விநாடிக்கு 275 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. பொள்ளாச்சி: கடந்த இரண்டு நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள பி.ஏ.பி., திட்ட அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.பரம்பிக்குளம் அணையின் 72 அடி உயரத்தில் 16.70 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 581 கன அடி நீர் வரத்தாகவும், 810 கன அடி நீர் வெளியேற்றமாகவும் உள்ளது. ஆழியாறு அணையின் 120 அடி உயரத்தில், 94.60 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு, விநாடிக்கு 882 கனஅடி நீர் வரத்தாகவும், 203 கனஅடி தண்ணீர் வெளியேற்றமாகவும் உள்ளது. ஆழியாறு அணையில் நேற்று ஒரு அடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது.திருமூர்த்தி அணையின் 60 அடி உயரத்தில் 16.93 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு 617 கனஅடி தண்ணீர் வரத்தாகவும், 428 கனஅடி தண்ணீர் வெளியேற்றமாகவும் உள்ளது.

அமராவதி அணையின் 90 அடி உயரத்தில் 38.05 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு, ஆயிரத்து 952 கனஅடி தண்ணீர் வரத்தாக உள்ளது. அணையிலிருந்து தண்ணீர் வெளியேறுவது நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. இதனால் நேற்று ஒரே நாளில் ஐந்து அடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது.நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையளவு (அளவுகள் மில்லி மீட்டரில்) விபரம் வருமாறு: சோலையாறு - 96, பரம்பிக்குளம் - 113, ஆழியாறு - 4.5, திருமூர்த்தி - 5, மேல் நீராறு - 113, கீழ் நீராறு - 100, மேல் ஆழியாறு - 18, காடம்பாறை- 17, வால்பாறை - 93, வேட்டைக்காரன்புதூர் - 5, மணக்கடவு - 15.4, நல்லாறு - 4, பொள்ளாச்சி - 7, சர்க்கார்பதி - 18, தூணக்கடவு - 48, பெருவாரிபள்ளம் - 52 என்ற அளவில் மழை பெய்தது.

**அன்னூர் விவசாயிக்கு விருது**

அன்னூர் : அன்னூர் விவசாயிக்கு வனத்துறை விரிவாக்க மையத்தின் சார்பில் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.அன்னூர் அருகே பட்டக்காரன்புதூரை சேர்ந்தவர் சுப்ரமணியன்; விவசாயி. இவர் தன்னுடைய தோட்டத்தில் சொட்டுநீர் அமைத்தல், இயற்கை உரம் பயன்படுத்துதல், அதிக விளைச்சல் தரும் பயறு ரக விதைகள் குறித்து பல ஆய்வுகள் செய்து வேளாண் பல்கலைக்கு தெரிவித்துள்ளார். சொட்டு நீர் பாசனம் குறித்த பயிற்சிக்கு இஸ்ரேல்

சென்று வந்துள்ளார். வேளாண் பல்கலை சார்பில் நடந்த விவசாய கருத்தரங்குகளில் பங்கேற்றுள்ளார். இவருக்கு சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.வனமரபியல், மரப்பெருக்கு நிறுவனம், தமிழ்நாடு வனத்துறை விரிவாக்க மையம் மற்றும் கோவை மாவட்ட மூலிகை மற்றும் மரம் வளர்ப்போர் சங்கம் சார்பில் உலக சுற்றுச்சூழல் தின விழா நடந்தது. விழாவில் தமிழக திட்டக்குழு முழுநேர உறுப்பினர் குமாரவேலு, சங்கத்தின் மாவட்ட தலைவர் தேவராஜன், செயலாளர் வின்சென்ட் உள்பட பலர் பங்கேற்றனர். இதில் சுற்றுச்சூழலை பசுமையாக்க அதிக மரங்களை நட்டதற்காக பட்டக்காரன்புதூர் சுப்ரமணியத்துக்கு சாதனையாளர் விருது வழங்கப் பட்டது.

**பருத்தியில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறை: வேளாண் அதிகாரி தகவல்**

செய்துங்கநல்லூர்: பருத்தியில் மாவுப்பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த வழிமுறைகளை வேளாண்மை விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

பருத்திப் பயிரில் எறும்பு நடமாட்டம் உள்ளதா, நுனிக்கிளைகள் கொத்தாக உள்ளனவா, வெயில் நேரத்தில் இலைகள் பளபளப்பாக மின்னுகின்றனவா, பஞ்சுபோல் அடை, அடையாக நுனிக்குருத்து, இலைகள், காய்களில் ஓட்டிக் கொண்டிருக்கின்றனவா என்று பார்த்து பருத்திப் பயிரில் மாவுப்பூச்சி தாக்குதல் உள்ளது என்பதை தெரிந்து கொள்ளலாம். பொதுவாக மாவுப்பூச்சி தாக்குதல் துவக்கத்தில் இங்கும் அங்குமாக ஒரு சில செடிகளில் மட்டுமே காணப்படும். நுனிக்குருத்து, இலைகள், காய்கள் ஆகியவற்றில் இப்பூச்சி தோன்றி சாற்றை உறிஞ்சும். இதனால் தாக்கப்பட்ட செடிகள் மஞ்சள் நிறமாக மாறி, வாடி காய்ந்து விடும். சில சமயங்களில் இலைகள் காய்கள் உதிர்ந்து விடும். இப்பூச்சி கூட்டம் கூட்டமாக பஞ்சுபோல் அடையாக இலை மற்றும் தண்டுகளில் ஒட்டிக் கொண்டிருக்கும்.பரவும் விதம்: பருத்தி அறுவடை போன்ற செயல்களின் போது உடைகளில் ஒட்டி வயலின் பிற பகுதிகளுக்குப் பரவுகின்றன.

அருகில் அறுவடை முடிந்த பின்னரும் அகற்றப்படாத கத்தரி, பருத்தி, வெண்டை செடிகள் இருப்பின், அவற்றில் மாவுப்பூச்சிகள் பெருகி, காற்று மற்றும் மனித நடமாட்டம் மூலம் அருகிலுள்ள புதிய பயிர்களுக்குப் பரவுகின்றன. பருத்தியைத் தவிர வெண்டை, புடலை, கோவை செம்பருத்தி, புகையிலை, வாழை, கொய்யா, சீத்தாப்பழம் போனற பயிர்களிலும் குரோட்டன்ஸ், நாயுருவி போன்ற செடிகளிலும் காணப்படுகின்றது. இதனை கட்டுப்படுத்த செய்யவேண்டியது என்னவென்றால், வயலைச் சுற்றிலும் நன்கு உயரமாக வளரக் கூடிய சோளப் பயிரினை நெருக்கமாக வேலி போல் பயிரிட்டால் அரண் போல் இருந்து காற்று மூலம் பரவும் மாவுப்பூச்சிகள் வயலினுள் வருவது தடுக்கப்படும். மக்காச்சோளம், தட்டை பயறு போன்றவற்றினை வாய்கால் வரப்புகளில் ஆங்காங்கே பயிரிட்டால் முறையே கிரைசோபா,

பொறி வண்டு போன்ற நன்மை தரும் பூச்சிகள் பெருகி மாவுப்பூச்சிகளின் பல்வேறு பருவங்களைக் கட்டுப்படுத்துகின்றன. காற்று மூலம் பரவும் மாவுப்பூச்சிகளை கண்காணிக்க நெடுஞ்சாலை மஞ்சள் நிறம் பூசப்பட்ட டப்பாக்களில் விளக்கெண்ணெய் தடவி ஏக்கருக்கு ஐந்து என்ற அளவில் இரண்டடி உயரக் குச்சிகளில் கவிழ்த்து வைக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட அளவை விட அதிகமாக தழைச்சத்து உரங்களை இடுவது தவிர்க்கப்பட வேண்டும்.

இதனைக் கட்டுப்படுத்த மீதைல் பாரத்தியான் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு மூன்று மில்லி வீதம் அல்லது குளோர்பைரிபாஸ் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஐந்து மில்லி வீதம் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு பயிர் முழுவதும் நனையும்படித் தெளிக்க வேண்டும். மருந்துக் கரைசல் பயிரின் பாகங்கள் மற்றும் மாவுப்பூச்சிகளின் மீதுள்ள மாவுபோன்ற படலத்தினுள் நன்கு பரவிப் படிவதற்காக வேளாண்மைக்கான திரவ சோப்புகளான சாண்டோவிட், இன்ட்ரான், ஸ்டிக்கால், தனுவெட் போன்றவற்றுள் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் மருந்து கரைசலுக்கு கால் மில்லி வீதம் சேர்த்துக் கலக்கிக் கொள்ள வேண்டும். 10-15 நாட்கள் கழித்து மீண்டும் மருந்து தெளிக்க வேண்டும். கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க பயிரின் வளர்ச்சியினைப் பொருத்து ஏக்கருக்கு இருநூறு முதல் நானூறு லிட்டர் வரை மருந்துக் கரைசல் தேவைப்படும். இவ்வாறு திருவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முருகேசன் தெரிவித்தார்.

**பசுந்தாள் உரப்பயிர்கள் பயிர் செய்ய வேளாண் துறை அறிவுரை**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது பருவமழை பரவலாக பெய்ய துவங்கிய நிலையில் விவசாயிகள் பசுந்தாள் உரப்பயிர்களை பயிர் செய்ய வேளாண் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

மாவட்ட வேளாண் இணை இயக்குனர் ராஜன் வெளியிட்டுள்ள அறிக்கை: விவசாயத்துக்கு பயன்படுத்தப்படும் ரசாயன உரங்களின் தொடர்ந்த பயன்பாட்டினால் மண்ணில் ரசாயன குணங்களில் மாற்றம் ஏற்படுவதுடன் மண்வளத்தையும் தொடர்ந்து பாதித்து வருகின்றது. பண்ணை இடுபொருட்களின் பயன்பாட்டில் ரசாயன உரங்கள் முக்கிய பங்ககாற்றுவதால் அவற்றில் தேவைகளை குறைந்து பண்ணை வருமானத்தை அதிகரிப்பது முக்கிய கடமையாகும்.

எருக்களான பசுந்தாள் உரமிடுதல், மக்கிய தொழு உரமிடுதல் போன்றவற்றின் பயன்பாட்டில் நம் நாடு உணவுப்பற்றாக்குறையிலிருந்து மீண்டு உணவு சேமிப்புக்கு மாற்றமடைந்துள்ளது. எனவே உரத்துக்கு மாற்றாக மண்ணில் அங்ககப்பொருட்களின் அளவை அதிகரிப்பதற்காக பயிரிடப்படும் பயிர்களே பசுந்தாள் உரப்பயிர்களாகும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல் பயிர் அறுவடை முடிந்து தற்போது நிலங்கள் தரிசாக உள்ளன. மாவட்டத்தில் தற்போது பருவமழை துவங்கி பரவலாக மழை பெய்து வருகிறது. எனவே அடுத்து வரும் சாகுபடி பயிர்களுக்கு ஏற்ற அங்கக சத்துக்களை மண்ணில் நிலை நிறுத்த பசுந்தாள் உரப்பயிர்களை பயிரிடுதவற்கு தற்போது தக்க தருணமாகும். இதற்காக பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைபூண்டு, சணப்பு போன்ற பயிர்களில் ஏதேனும் ஒன்றை விவசாயிகள் தேர்வு செய்து பயிரிடலாம். இதில் தக்கை பூண்டு விதையை ஒரு ஏக்கருக்கு 20 கிலோ வீதம் பயன்படுத்தலாம். விதையுடன் "ரைசோபியம்' உயிர் உரத்தினை இரு பாக்கெட் வீதம் விதை நேர்த்தி செய்து வயலில் விதைக்க வேண்டும். இவற்றை 45 முதல் 60 நாட்களுக்குள் அறுவடை செய்து வயலில் உழுது விடலாம்.

இதே போன்று சணப்பு விதையை ஒரு ஏக்கருக்கு 15 முதல் 20 கிலோ விதைக்கலாம். விதையுடன் "ரைசோபியம்' உயிர் உரத்தினை இரு பொட்டலம் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். விதைத்த 45 முதல் 60 நாட்களில் அறுவடை செய்து வயலில் உழுது விடலாம். பசுந்தாள் உரப்பயிர்கள் சாகுபடி செய்வதின் மூலமாக ஒரு ஏக்கருக்கு எட்டு முதல் 10 டன் பசுந்தாள் உரமானது கிடைக்கப்பெற்று சுமார் 50 முதல் 70 கிலோ வரை தழைச்சத்து மண்ணில் நிலை நிறுத்தப்படுகிறது. மண்ணுக்கு பசுந்தாள் உரமிடுவதல் மூலம் மண்ணில் இயற்பியல் மற்றும் வேதியியல் மாற்றங்கள் சாதகமாக அமைகின்றது. மண்ணில் காற்றோட்டத்தினை அதிகரித்து அடிமட்டத்தில் உள்ள ஊட்டச்சத்துகளை உறிஞ்சி மேல்மட்டத்திலுள்ள வேர்களுக்கு கிடைக்க செய்கின்றது. இதனால், பயிர் மகசூல் 15 முதல் 20 சதவீதம் அதிகரிக்கின்றது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பசுந்தாள் உர பயிர்களை சாகுபடி செய்வதற்கு இதுவே தக்க தருணமாகும். எனவே விவசாயிகள் பசுந்தாள் உரப்பயிர்களை காலத்தே பயிர் செய்து உரப்பயன்பாட்டினை குறைத்து மகசூலை பெருக்க வேண்டும். மேலும் விபரங்கள் அறிய விவசாயிகள் அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை அணுக வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**வேலையில்லா பட்டதாரி இளைஞர்களுக்கு பண்ணைக் கருவிகளை இயக்க பயிற்சி: உ.உ.க., தகவல்**

திருப்பூர்: தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நலவாரியம் மூலம், வேலையில்லாத பட்டதாரி இளைஞர்களுக்கு பண்ணைக் கருவிகளை இயக்கும் பயிற்சி தர முயற்சிக்கப்படும் என, அவ்வாரியத் தலைவர் செல்லமுத்து திருப்பூரில் நேற்று கூறினார்.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நலவாரியத் தலைவர் செல்லமுத்து, நிருபர்களிடம் கூறியதாவது: வாரியத்தில், 75 லட்சம் விவசாய குடும்பங்களைச் சேர்ந்த 1.75 கோடி பேர் உறுப்பினர்களாக பதிவாகி உள்ளனர். இந்த ஓராண்டில், 26 மாவட்டங்களைச் சேர்ந்த 14 ஆயிரம்

பேருக்கு 15 கோடி ரூபாய் உதவித்தொகை வழங்கப்பட்டு உள்ளது. இத்திட்டம் குறித்து தெரியாத கிராமப்புற மக்களுக்கும், இதை கொண்டு சென்று, இன்னும் ஏராளமான விவசாயக் குடும்பங்கள் இதன்மூலம் பயன்பெற ஏற்பாடு செய்யப்படும். 25 லட்சம் பம்பு செட்டுகளுக்கு இலவச மின்சாரம், 7 ஆயிரம் கோடி ரூபாய் கடன் ரத்து, போன்ற அரசின் சலுகைகளால், விவசாயிகள் தற்கொலை போன்ற நிலைகளில் இருந்து மீண்டுள்ளனர்.

இந்த வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ள வேலையில்லாத பட்டதாரி இளைஞர்களை, வேளாண் துறையோடு இணைந்து தேர்வு செய்து அவர்களுக்கு பண்ணைக் கருவிகளை இயக்கும் பயிற்சி அளிக்க முயற்சி எடுக்கப்படும்.
கள் இறக்கவும், விற்கவும் அனுமதிக்க வேண்டும் என்பதே உழவர் உழைப்பாளர் கட்சியின் கோரிக்கை; இதில் மாற்றமில்லை. நீதிபதி சிவசுப்பிரமணியன் கமிட்டியின் அறிக்கைக்காக காத்திருக்கிறோம். நல்ல முடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையை முதல்வர் கருணாநிதி தந்துள்ளார். ஆனால், கள் இறக்குவதால் மட்டுமே தென்னை விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர்ந்து விடுமா என்ற கேள்வியும் உள்ளது.

கள் இறக்கப்பட்ட காலத்தில் இரண்டு கோடி தென்னை மரங்கள் இருந்தன. தற்போது ஒன்பது கோடி தென்னை மரங்கள் உள்ளன. எத்தனை மரங்களில் கள் கட்டுவது, எந்த இடங்களில் விற்பது போன்ற பிரச்னைகளால் வன்முறை போன்ற பாதிப்புகள் ஏற்படலாம். இதனால் பெண்கள் மத்தியில் அரசுக்கு எதிர்ப்பு கிளம்ப வாய்ப்புள்ளது. கள் ஒரு சமுதாயப் பிரச்னையாக இருப்பதால், அரசின் முடிவில் தாமதம் ஏற்படுகிறது. எனினும், கள் விற்பனையால் டாஸ்மாக் வருவாய் குறையாது என்ற கருத்தை முதல்வரிடம் தெரிவித்துள்ளோம். மேலும், தென்னை வளர்ச்சி வாரியத்தின் மூலம் மானியங்கள், சலுகைகள், கடன் உதவிகளை அரசு வழங்குகிறது.

தேங்காய் தொட்டி அரைக்கும் தொழிலுக்கு 50 லட்சம் ரூபாய் வரை அரசு மானியம் கிடைக்கிறது. 100 சதவீத ஏற்றுமதி செய்யப்படும் தேங்காய் தொட்டி பொடி, கொசுவர்த்தி, ஊதுபத்தி செய்ய பயன்படுகிறது. விவசாயப் பொருட்களுக்கு விலையின்மை, விவசாயத்துக்கு ஆட்கள் பற்றாக்குறை, தண்ணீர் பிரச்னை நீடிக்கிறது. வேலை உறுதி திட்ட தொழிலாளர்களை விவசாயத்தின் பக்கம் திருப்பிவிட்டால், ஆட்கள் பற்றாக்குறை என்ற நிலை மாறும்.
நதிகள் இணைப்பு, ஏரிகளை தூர்வாருதல் போன்ற பணிகளால் தண்ணீர் தேவை பூர்த்தியாக வாய்ப்பு ள்ளது.பருப்பு, பயிர் உற்பத்தி ஆட்கள் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டால் உணவு பொருட்களுக்கு திண்டாடும் நிலை ஏற்படும்.

இலவசங்களும், சலுகைகளும், கடன் தள்ளுபடிகள் இருந்தாலும், கட்டுப்படியாகாத விலை என்றால் விவசாய தொழில் பாதிக்கும். அரசிடம் விவசாய பொருட்களுக்கு சீரான விலை

வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது. ஆன்லைன் வர்த்தகம், கமிஷன் முறை ஒழிக்கப்பட வேண்டும். இவ்வாறு, செல்லமுத்து கூறினார். உழவர் உழைப்பாளர் கட்சி மாவட்ட தலைவர் பாலசுப்பிரமணியம் உட்பட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

**இயற்கையின் கொடையான ஈச்சமரங்களை காப்போம் விவசாயிகளுக்கு பலன் தரும் புதர் மரம்**

- நமது சிறப்பு நிருபர் - மதுரை மாவட்டம் கள்ளிக்குடி பகுதியில் பனைமரங்கள் அதிகம் உள்ளன. அதே அளவுக்கு கள்ளிக்குடி, மேலப்பட்டி, ஓடைப்பட்டி, சென்னம்பட்டி பகுதிகளில் ஈச்சமரங்கள் மானாவாரியாக விளைந்துள்ளன. அங்கு நிலவும் தட்பவெப்பம், மணல் கலந்த நிலம் தான் அதற்கு காரணம். வறண்ட வானம் பார்த்த பூமியான இங்கு ஓடைகள், காடுகளில் தென்னை போல் ஓங்கி வளர்ந்துள்ள ஈச்சமரங்கள் பராமரிப் பின்றி அழிந்து வருகின்றன. இதன் தாவரவியல் பெயர் "போனிக்ஸ் சால்வஸ்ட்ரீஸ்'. ஆங்கிலத்தில் "சில்வர் டேட்ஸ் பால்ம்' எனவும், தமிழில் "இனிப்பு ஈச்சமரம்' எனவும் அழைப்பர். தமிழகம் மற்றும் தென் மாநிலங்கள், வடமாநிலங்களில் பரவலாக காணப்படும் புதர் மரமாகும். தமிழகத்தில் ஆறு, சிற்றாறு, ஓடைகள் மற்றும் உவர் தரிசு நிலங்களில் ஈச்சமரங்கள் காணப்படுகின்றன. இவை 15 அடி உயரம் வரை வளரும். தென்னை போல் அகன்ற வட்டமான கிளைகளுடன், கரிய முட்களுடன் கூடிய சிற்றிலைகளை கொண்டிருக்கும். கோடையில் ஈச்சமரங்கள் பூக்கும். ஆண், பெண் பூக்கள் தனித்தனி மரங்களில் பூக்கும். காற்றின் மூலம் மகரந்தச் சேர்க்கை நடைபெறும். துவக்கத்தில் காய்கள் பச்சை நிறத்தில் இருக்கும். பின் ஆரஞ்சு, மஞ்சள் நிறம் அடைந்து, இறுதியில் கருமை நிறத்தில் ஈச்சம் பழங்களாக மாறும். தென்னை, பனை மரங்களைப் போல் ஈச்சமரங்களில் கள், பதனீர் பெறலாம். மழைக்காலம் முடிந்ததும் பதனீர் இறக்கத் துவங்குவர். இந்த பதனீரில் வெல்லம், கற்கண்டு தயாரிக்கின்றனர். ஓலைகளைக் கொண்டு பாய்கள், பெட்டிகள் முடையலாம். வீடுகளை சுத்தம் செய்யும் துடைப்பம் தயாரிக்கின்றனர். மொத்தத்தில் கைவினைகளுக்கு கைகொடுக்கும் மரமாக ஈச்சமரம் திகழ்கிறது. அடிமரம் வீடுகள் மற்றும் செங்கல் சூளைகளுக்கு விறகாக பயன்படுகிறது. இதை யாரும் பயிரிட்டு வளர்ப்பதில்லை. இயற்கையாகவே ஓடை, காட்டாறுகளின் ஓரமாக வளர்கின்றன. தரிசு நிலங்களில் முளைத்து புதராக வளர்கின்றன. கள்ளிக்குடியில் பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் சீசனில் ஈச்சமரங்களில் காய்க்கும் ஈச்சம் பழங்களின் சதைப்பகுதி சிறியதாகவும், விதை பெரிதாகவும் இருக்கும். மழைக்காலங்களில் ஓடைகளில் மண் அரிப்பால் ஈச்சமரங்கள் கீழே சாய்ந்து விடுகின்றன. இதனாலும், முறையாக பராமரிக்காததாலும் படிப்படியாக இப்பகுதியில் ஈச்சமரங்கள் அழிந்து வருகின்றன. மதுரை மாவட்டத்தில் அரிதாக கள்ளிக்குடியில் "இயற்கையின் கொடை'யாக வளர்ந்துள்ள ஈச்சமரங்களை காக்க பனை பொருட்கள் வாரியம் மற்றும் தமிழக அரசு முன்வர வேண்டும். இதனால் அப்பகுதி கிராமங்களில் விவசாயிகள், சுய உதவிக்குழுக்கள் வேலைவாய்ப்பு பெற முடியும்.

---

**மக்காச்சோள சாகுபடிக்கு மானியம்**

மதுரை: வாடிப்பட்டி வட்டாரத்தில் மக்காச்சோள சாகுபடி பரப்பு ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கிறது. கடந்த ஆண்டு மட்டும் 150 எக்டேர் பரப்பளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டது. அதையடுத்து இந்த ஆண்டு மக்காச்சோள சாகுபடியாளர்களுக்கு விவசாயத் துறை சார்பில் ஐசோபாம் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பெரு விளக்கப் பண்ணைகள் மானியத்தில் அமைக்கப்படுகிறது. இதன்படி ஐந்து எக்டேருக்கு ரூ.4000 மதிப்பில் இடுபொருள் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் மக்காச்சோளம் சாகுபடி பரப்பில் நீர்கடத்தும் பைப்புகள் அமைக்க எக்டேருக்கு ரூ.15 ஆயிரம் வரை மானியமாக வழங்கப்படும். இது தொடர்பான விபரங்களை வட்டார விவசாய அலுவலர் மற்றும் துணை அலுவலர், உதவி அலுவலர்களை அணுகி விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம் என உதவி இயக்குனர் ராமநாதன் தெரிவித்தார்.

**கோழிவளர்ப்பு பயிற்சி**

மதுரை: திருப்பரங்குன்றம் தமிழ் நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தில் நவீன முறையில் கோழி, நாட்டுக்கோழி, காடை, வான்கோழி வளர்ப்பு பயிற்சி இலவசமாக நடைபெற உள்ளது. 2 நாள் நடைபெறும் இப்பயிற்சி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும். மேலும் விபரங்களுக்கு 0452- 248 3903 ல் தொடர்பு கொள்ளலாம்.

**தென்னைக்கு காப்பீடு திட்டம்:வேளாண் அதிகாரி விளக்கம்**

தென்காசி:தென்னைக்கு காப்பீடு திட்டம் குறித்து வாசுதேவநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் விளக்கம் அளித்துள்ளார்.இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:வாசுதேவநல்லூர் வட்டார பகுதியில் பரவலாக தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் தென்னை காப்பீடு திட்டம் நடப்பு ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இயற்கை சீற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து அதாவது புயல், சூறாவளி, கடும் மழை, வெள்ளம், மின்னல், தீ விபத்து, பூகம்பம், நிலச்சரிவு, சுனாமி, கடும் வறட்சி, பூச்சிநோய் தாக்குதல் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புக்கு காப்பீடு தொகை கிடைக்கும். இவை தவிர வேறு காரணங்களால் தென்னை மரங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் காப்பீடு கிடைக்காது.குறைந்தபட்சம் 10 தென்னைகளுக்கு காப்பீடு செய்யப்படும். செலுத்தவேண்டிய பிரிமிய தொகையில் 50 சதவீத தொகையை தென்னை வளர்ச்சி வாரியமும், 25 சதவீத தொகையை தமிழ்நாடு அரசும் வழங்குகிறது. மீதமுள்ள 25 சதவீத தொகையை விவசாயிகள் செலுத்த வேண்டும்.

---

காப்பீடு செய்யும் முறை:நான்கு முதல் 15 ஆண்டு வயதுள்ள குட்டை ரகங்களுக்கு மற்றும் 7 முதல் 15 ஆண்டு வயதுள்ள நெட்டை மற்றும் நெட்டை-குட்டை தென்னைகளுக்கு ஒரு மரத்திற்கு விவசாயிகள் 1.20 ரூபாய் காப்பீடு தொகை செலுத்த வேண்டும். மேலும் எல்லா ரகங்களுக்கும் 15 முதல் 60 ஆண்டு வயதுள்ள தென்னை மரங்களுக்கு விவசாயிகள் ஒரு தென்னைக்கு 1.60 ரூபாய் காப்பீடு தொகை செலுத்த வேண்டும்.காப்பீடு தொகையை டிமாண்ட் டிராப்ட் ஆக எடுத்து அருகாமையில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு உரிய படிவத்தை பூர்த்தி செய்து வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலரிடம் வழங்க வேண்டும். டிமாண்ட் டிராப்ட் "அக்ரிகல்சரல் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட், சென்னை' என்ற முகவரிக்கு எடுக்க வேண்டும்.

தென்னை சாகுபடி விவசாயிகள் உடனடியாக தென்னை காப்பீடு திட்டத்தில் பிரிமியம் செலுத்தி சேர்ந்து கொள்ள வேண்டும். இது தொடர்பாக மேலும் அதிக விபரங்களுக்கு உதவி வேளாண்மை அலுவலர்கள் சிவகிரி செல்லையா, தென்மலை பால்ராஜ், ராயகிரி சம்சுதீன், புளியங்குடி சுபாஷ் சந்திரபோஸ், வாசுதேவநல்லூர் ஆறுமுகம், முள்ளிகுளம் அண்ணாதுரை அல்லது வாசுதேவநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் அறிக்கையில் கூறியுள்ளார்.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

***அத்தியாவசிய உணவு பொருள்களின் விலை அதிகரிப்பால் நாட்டின் பணவீக்கம் 10.16%–ஆக உயர்வு***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் அனைத்து பொருள்களுக்கான பணவீக்க விகிதம், சென்ற மே மாதத்தில் 10.16 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதற்கு உணவு பொருள்கள் மற்றும் உலோகங்கள் உள்ளிட்ட தயாரிப்பு பொருள்கள் விலை மிகவும் அதிகரித்ததே காரணமாகும். முந்தைய ஏப்ரல் மாதத்தில் நாட்டின் பணவீக்க விகிதம் 9.59 சதவீதமாக இருந்தது.*
*கடந்த மார்ச் மாதத்தில் பணவீக்க விகிதம் 9.9 சதவீதமாக இருந்தது. இது, தற்போது 11.04 சதவீதமாக மறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆக, நாட்டின் பணவீக்கம் இரட்டை இலக்க அளவிற்கு அதிகரித்துள்ளது.*
*மே மாதம்*

*சென்ற மே மாதத்தில், உளுந்து (5 சதவீதம்) பச்சைப் பயறு (3 சதவீதம்), தேயிலை (21 சதவீதம்) ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது.*
*தயாரிப்பு பொருள்களில், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் விலை 26 சதவீதம் உயர்ந்துள்ளது. உருக்குத் தகடுகள் விலை 14 சதவீதம் அதிகரித்துள்ளது. உலோகங்கள் விலை ஒட்டுமொத்தத்தில் 3.4 சதவீதம் உயர்ந்துள்ளது. இதுபோன்ற காரணங்களால், பணவீக்க விகிதம் மதிப்பீடுகளையும் விஞ்சி மிகவும் அதிகரித்துள்ளது*
*பணவீக்கத்தை கட்டுப்படுத்த வேண்டுமானால், தேவைப்பாட்டை ஈடுகட்டும் வகையில் உணவு தானியங்கள் மற்றும் இதர பொருள்கள் கிடைக்க வேண்டும். பணப் புழக்கத்தையும் கட்டுப்படுத்த வேண்டும். பணப் புழக்கத்தை குறைக்கும் நடவடிக்கையை எடுப்பதற்கு முன்னர், பொருளாதார வளர்ச்சி நன்றாக உள்ளதா என்பதை பரிசீலனை செய்ய வேண்டும்.*

*பாரத ரிசர்வ் வங்கி*

*இந்நிலையில், பாரத ரிசர்வ் வங்கி வரும் ஜூலை 27–ந் தேதி அன்று கடன் கொள்கை ஆய்வு அறிக்கையை வெளியிட உள்ளது. பணவீக்க விகிதம் கடந்த 19 மாதங்களில் இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளதையடுத்து, நாட்டில் பணப்புழக்கத்தை குறைக்கும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி, இந்த அறிக்கையை வெளியிடுவதற்கு முன்பாகவே முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதத்தை உயர்த்துமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த கருத்துக்கு வலுவூட்டும் வகையில், மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு அடிப்படையில் ஆசியாவின் மூன்றாவது மிகப் பெரிய நாடாகத் திகழும் நம் நாட்டில், பொருளாதார வளர்ச்சி நன்றாக உள்ளது. கடந்த ஏப்ரல் மாதத்தில், நாட்டின் தயாரிப்புத் துறையில் கடந்த 15 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.*

*பணப்புழக்கம்*

*அதேசமயம், தொலைத் தொடர்புச் சேவைத் துறையில் மூன்றாம் தலைமுறையினருக்கான அலைவரிசை ஒதுக்கீடு மற்றும் அகண்ட அலைவரிசை ஒதுக்கீடு ஆகியவற்றைப் பெற செல்போன் சேவை நிறுவனங்கள் ரூ.1 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகையைச் செலுத்த வேண்டும். மேலும், நிறுவனங்கள் இம்மாதம் முன்கூட்டிய வரியைச் செலுத்த உள்ளன. இதனால், நாட்டில் பணப்புழக்கம் குறைய வாய்ப்புள்ளது. மேலும், பல ஐரோப்பிய நாடுகள் கடன் சுமையில் சிக்கி தவிப்பதால், நிதி நெருக்கடி ஏற்படலாம் என்ற அச்சப்பாடு நிலவுகிறது. எனவே, பாரத ரிசர்வ் வங்கி முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை திடீரென உயர்த்தாது என ஒரு சில பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.*
*நடப்பு ஆண்டில், பருவமழை நன்றாக இருக்கும் எனவும், உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், பணவீக்கம் குறைய வாய்ப்புள்ளது.*

*பெட்ரோல் – டீசல்*

*இந்நிலையில், மத்திய அரசு, பெட்ரோல், டீசல் விலையை உயர்த்துவது குறித்து பரிசீலனை செய்து வருகிறது. இவற்றின் விலையை உயர்த்தினால், பணவீக்க விகிதம் மேலும் அதிகரிக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.*